காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை

# ஞாயிற்றுக்கிழமைகளில் மெட்ரோ ரெயில்கள் ஓடும்

சென்னை, மே.1-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் அனைத்து மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் கொரோனா வைரசை தடுப்பதற்காக போதுமான முன்எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில், கொரோனா வைரசை கட்டுப்படுத்த தமிழக அரசின் அறிவுறுத்தல்களின்படி மெட்ரோ ரெயில் சேவைகள் நேரம் கடந்த ஏப்ரல் 20-ந் தேதி முதல் மாற்றி அமைக்கப்பட்டது. மேலும், தமிழக அரசின் ஆணைப்படி மே மாதத்தில் வரும்அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் மெட்ரோ ரெயில் சேவைகள் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை இயக்கப்படும்.

விம்கோ நகர் மெட்ரோ முதல் விமான நிலையம் மெட்ரோ வரையிலான நீல வழித்தடத்தில் 1 மணி நேர இடைவெளியில் மெட்ரோ ரெயில்கள் இயக்கப்படும். சென்டிரல் மெட்ரோ முதல் விமான நிலையம் மெட்ரோ வரை (ஆலந்தூர், கோயம்பேடு வழியாக) பச்சை வழித்தடத்தில் 2 மணி நேர இடைவெளியில் மெட்ரோ ரெயில்கள் இயக்கப்படும்.

இதே போன்று, சென்டிரல் முதல் பரங்கிமலை வரை 2 மணி நேர இடைவெளியில் மெட்ரோ ரெயில்கள் இயக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.